**P.R.NO. 755** **DT 11.12.2025**

## பத்திரிக்கைசெய்தி

நீலகிரி மாவட்ட ஊர்க்காவல் படைபிரிவில் காலியாக உள்ள துணை வட்டார தளபதி (Deputy Area Commander) பதவிக்கு தகுதியான நபரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. கல்வித்தகுதி, பட்டப்படிப்பு அல்லுத அதற்குமேல் படித்தவர்களாக இருத்தல் வேண்டும். வயது வரம்பு 21 முதல் 50 வயதுக்குள் இருத்தல் வேண்டும். இது ஒரு கவுரவப் பதவி என்பதால் ஊதியம் ஏதும் வழங்கப்படமாட்டாது. தேசிய மாணவர் படையில் பயிற்சி பெற்ற விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், உயர்பதவி வகிப்பவர்கள், துணை வட்டார தளபதி பதவியில் சேர்ந்து தொண்டு செய்ய விருப்பம் மற்றும் சேவை மனப்பான்மை உடைய பெணகள் மட்டும் விண்ணப்பக்கலாம். துணை வட்டார தளபதி பதவிக்கு (Deputy Area Commander) விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது விண்ணப்பத்தினை சுயவிவரகுறிப்புடன் காவல் கண்காணிப்பாளர், நீலகிரிமாவட்டம் என்ற முகவரிக்கு 25.12.2025-ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர், நீலகிரி மாவட்டம், திருமதி. என்.எஸ். நிஷா, இ.கா.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

------------------------------------------------------------------------------------------------

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.